


கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டப் பொது உறுப்பினர்கள் கூட்டத்தில், உணவு மற்றும் உணவுப் பொருள் வலங்கள் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பங்கேற்று பேசினார். உடன் மாவட்டச் செயலாளர் பிரகாஷ் எம்.எல்.ஏ., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.முருகன் , மேயர் சத்யா , மாவட்ட அவைத் தலைவர் யுவராஜ் நிர்வாகிகள் உள்ளனர்.



விழுப்புரம் தெற்கு மாவட்டம் ஒன்றிய , நகர , பேரூர் மாணவரணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல் விழுப்புரம் கலைஞர் அறிவாலயம், தளபதி அரங்கத்தில் மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன் கௌதமசிகாமணி தலைமையில் நடைபெற்றது. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்துகொண்டு நேர்காணலை துவக்கி வைத்தார். மாநில மாணவரணி இணைச் செயலாளர் வழக்கறிஞர் பூவை ஜெரால்டு, துணைச் செயலாளர் கா தமிழ் அமுதரசன் ஆகியோர் நேர்காணலை நடத்தினர். மாவட்ட அமைப்பாளர் ஸ்ரீ பா.வினோத் வரவேற்புரை ஆற்றினார். மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் லெனின் விஜய், குணசேகர், அரங்கநாதன், அறிவழகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் அ.சிவா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ் மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், புதுச்சேரி மாணவர் அணி அமைப்பாளர் மணிமாறன் உள்ளிட்ட ஒன்றிய , நகர, பேரூர் கழக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம் அரூர் பேரூர் கழக செயலாளர் முல்லைரவி ஏற்பாட்டில் நடைபெற்ற . அரூர் பேரூர் கழக பொது உறுப்பினர் கூட்டத்தில் கழக ஆக்க பணிகள் குறித்து தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் சிறப்புரை ஆற்றினார்.கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் கீரை.விசுவநாதன்,ராஜேந்திரன்,மாவட்ட துணை செயலாளர் கிருஷ்ணகுமார், ஒன்றிய செயலாளர்கள் சந்திரமோகன்,வேடம்மாள் பேரூராட்சி துணைத் தலைவர் சூர்யா தனபால், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருப்பூர் தெற்கு மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மூலனூர் கிழக்கு ஒன்றியம், மூலனூர் மேற்கு ஒன்றியம், மூலனூர் பேரூர், கன்னிவாடி பேரூர் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் மூலனூர் ஸ்ரீ சுபலட்சுமி திருமண மண்டபத்தில் மாவட்டக் கழக செயலாளர் இல.பத்மநாபன் தலைமையில், மேற்கு ஒன்றிய செயலாளர் துரை தமிழரசு வரவேற்புறையில் கிழக்கு ஒன்றிய செயளாலர் ப.பழனிசாமி, பேரூர் செயலாளர்கள் பேரூராட்சி தலைவர் க.தொண்டபாணி, கன்னிவாடி சுரேஷ் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர், கழக இளைஞர் அணி துணை செயலாளர் கே.இ.பிரகாஷ் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள் உள்பட கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### திருச்சி மத்திய மாவட்டத்தில்

# மாநகர, ஒன்றிய, நகரப் பகுதிக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க. வைரமணி அறிக்கை !



திருச்சி, செப்.2-

திருச்சி மத்திய மாவட்டச் செயலாளர் க. வைரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

திருச்சி மத்திய மாவட்டத்தில் மாநகர, ஒன்றிய, நகர, பகுதிக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் கீழ்கண்ட விவரப்படி நடைபெறுகின்றது.

02.09.2024 - காலை 10 மணி - திருச்சி மாநகரம் (மேற்கு)- எல்.கே.எஸ். திருமண மஹால் மத்திய பேருந்து நிலையம், மாலை 3 மணி - இலால்குடி ஒன்றியம்-தேவி மஹால், இலால்குடி, மாலை 4 மணி - புள்ளம்பாடி ஒன்றியம்- கருப்பண்ண சுவாமி கோவில், புள்ளம்பாடி, 3.9.2024-காலை 9 மணி- பொன்னகர் பகுதி- மீனாட்சி திருமண மண்டபம், கருமண்டபம், காலை 10 மணி - அந்த நல்லூர் ஒன்றியம்- ராதா கிருஷ்ணன் திருமண மண்டபம் ஜீயபுரம், காலை 11 மணி - காஜாமலை பகுதி-ஏ.கே.எம்.மஹால் எடமலைப்பட்டிபுதூர், மாலை 4 மணி - திருவரங்கம் பகுதி- ஸ்ரீ ரெங்கா பவன், மாலை 5 மணி - திருவானைக்கோவில்- ஆறுநாட்டு வேளாளர் திருமண மண்டபம், மாலை 5 மணி - மணப்பாறை கிழக்கு- அர்ச்சனா மஹால் திருச்சி ரோடு, இரவு 7 மணி - உறையூர் பகுதி- ஜி.கே. எம்.மஹால் சாலை ரோடு, 4.9.2024-காலை 9 மணி - அண்ணாநகர் பகுதி-பி.எஸ். எம். திருமண மஹால் பீம நகர், காலை 10 மணி - தில்லை நகர் பகுதி- சண்முகா திருமண மண்டபம் புத்தூர், காலை 10 மணி - இலால்குடி நகரம்- கோவில் மண்டபம் சிவன் கோவில்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மதுக்கூரில் - தஞ்சை தெற்கு மாவட்டக் கழக விளையாட்டு மேம்பாட்டு அணி நடத்தும்-

# மாநில அளவிலான மாபெரும் எழுவர் கால்பந்து போட்டி - பரிசுகள் வழங்கல்

## மாவட்டச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. போட்டியை துவக்கி வைக்கிறார்

மதுக்கூர், செப்.1-

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு தஞ்சை தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் மதுக்கூரில் மாபெரும் எழுவர் கால் பந்து போட்டி நடைபெறுகிறது.

தஞ்சை தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணியின் சார்பில் நடத்தப்படும் மாநில அளவிலான எழுவர் கால்பந்து போட்டி மதுக்கூர் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 1.9.2024ல் தொடங்கி முதல் 8.9.2024 வரை நடைபெறுகிறது.

மதுக்கூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் ஆர். இளங்கோ தலைமையில், மதுக்கூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் வீ. கோவிந்தராசு முன்னிலையில் தஞ்சை தெற்கு மாவட்டச் செயலாளர் கா. அண்ணாதுரை எம்.எல்.ஏ., விளையாட்டு போட்டிகளைத் துவக்கி வைக்கிறார்.

போட்டியில் வெற்றி பெறும் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு முதல் பரிசு ரூ. 50000, இரண்டாம் பரிசு ரூ. 30000, மூன்றாம் பரிசு ரூ.15000, நான்காம் பரிசு ரூ.10000 மற்றும் கோப்பைகள் வழங்கப்படும்.

இதில் அமைப்பாளர். சொ. விஜயகுமார், துணை அமைப்பாளர்கள் மா. கோவிந்தராசு, ஆ.ராஜசேகர் ச. சண்முக சுந்தரம், பி. ராமதாஸ், ஆ. பாலமுருகன், ந.லெட்சுமண கார்த்திக், டி.சீனிவாசன் உட்பட பலர் கலந்து கொள்கிறார்கள்.



சேலம் மாவட்டம் தலைவாசல் ஒன்றியம் ஆறகளூர் ,சித்தேரி ஆகிய ஊராட்சிகளில் மகாத்மா காந்தியின் ஊரக வளர்ச்சி திட்டத்தின் மூலம் தலா ரூ. 60.லட்சம் மதிப்பில் புதிய ஊராட்சி அலுவலகம் கட்டும் பணியினை கிழக்கு மாவட்ட துணை செயலாளர் சின்னதுரை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மத்திய ஒன்றிய செயலாளர் சாத்தப்பாடி மணி, முன்னாள் எம்எல்ஏ குணசேகரன், ஊராட்சி மன்ற தலைவர்கள் விஜியன், ஆறுமுகம் , மு.தேவேந்திரன் மாவட்ட பிரதிநிதி கிருஷ்ணன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் கண்ணுசாமி, கிளை கழக செயலாளர்கள் செல்லையா, கருப்பையா, காங்கமுத்து, தனசேகரன், ஜெயராமன்,செல்வம் நரசிம்மன் சின்னசாமி,செல்லவேல், துரைசாமி, வேல்முருகன்,அன்புமணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம் கோத்தகிரி பேரூர் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் கோத்தகிரி லூக்ஸ் சர்ச் அரங்கில் கோத்தகிரி ஒன்றிய அவை தலைவர் கில்பர்ட் தலைமையில் நடைபெற்றது, ஒன்றிய செயலாளர் நெல்லை கண்ணன் அனைவரையும் வரவேற்றார். கூட்டத்தில், மாவட்ட கழக செயலாளர் பா.மு.முபாரக், தேர்தல் பணி செயலாளர் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கினர். நிகழ்ச்சியில் மாவட்ட கழக அவை தலைவர் போஜன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் எப்போ செந்தில், ராஜு, கீழ்கோத்தகிரி ஒன்றிய செயலாளர் பீமன், பொதுக்குழு உறுப்பினர்கள் வீரபத்திரன், சதக்கத்துல்லா, மாவட்ட அமைப்பாளர்கள் விவேகானந்தன், உமாநாத், கோத்தகிரி ஒன்றிய பெருந்தலைவர் ராம்குமார், கோத்தகிரி பேரூராட்சி தலைவர் ஜெயகுமாரி உட்பட ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், கிளை கழகங்களின் நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்துகொண்டனர். கூட்ட முடிவில் கோத்தகிரி பேரூர் செயலாளர் காளிதாஸ் நன்றி கூறினார்.

### பள்ளிக்கல்வித் துறைக்கு

# ஒன்றிய அரசு வழங்க வேண்டிய நிதியை உடனடியாக வழங்கிடுவீர்!

## தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர் கு.தியாகராஜன் அறிக்கை!

சென்னை, செப்.2-

தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர் கு.தியாகராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு ;

கடந்த 2004 முதல் சர்வ சிக்ஷா அபியான் என்ற பெயரிலும் தற்போது சமக்ரசிக்ஷா அபியான் என்ற பெயரிலும் தமிழ்நாடு பள்ளிக்கல்விதுறைக்கு ஒன்றிய அரசு 60 சதவீதமும் மாநில அரசு 40 சதவீதமும் நிதி ஒதுக்கி வருகிறது.

இந்த நிதியைப் பயன்படுத்தி ஆசிரியர்கள்,ஆசிரியர் பயிற்றுனர்கள்,பகுதிநேர ஆசிரியர்கள்,மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு ஆசிரியர்கள் ஆகியோருக்கு சம்பளம் வழங்கப்படுகிறது.

மாணவர்களுக்கான உதவித் தொகை, கலைத்திருவிழா, வெளிநாடுகளுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லுதல் போன்ற மாணவர்கள் நலன் சார்ந்த திட்டங்களுக்கு பயன்படுத்தப் பட்டு வருகிறது.

எஸ்.எஸ்.ஏ. திட்டத்திற்கு 202425 கல்வியாண்டில் தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய மொத்த நிதியில்,ஒன்றிய அரசு 4 தவணைகளில் ரூ.2152 கோடி வழங்க வேண்டும். 2024 ஏப்ரல் முதல் ஜுன் மாதம் வரை வழங்க வேண்டிய முதல் தவணை நிதி ரூ. 573 கோடியை இதுவரை விடுவிக்கவில்லை.

ஒன்றிய அரசு நிதி தரவில்லை என்பதற்காக சுமார் 20 ஆண்டுகளாக செயல்படுத்தி வரும் இத்திட்டங்களை நிறுத்த முடியாது. இத்திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்தி வருவதால் தான் தமிழ்நாடு கல்வியில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது.

பள்ளிக்கல்வித்துறைக்கு ஒன்றிய அரசு வழங்க வேண்டிய நிதியை விடுவிக்க வேண்டும் என்று ஒன்றிய மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சரை தமிழ்நாடு பள்ளிக்கல்விதுறை அமைச்சர் மற்றும் கல்வி அதிகாரிகள் சந்தித்து கேட்டபோது, தமிழ்நாடு தேசியக் கல்விக் கொள்கையை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றும்,பிஎம்ஸ்ரீ திட்டத்தில் சேர்ந்து கொள்ளும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும் என்றும் அவ்வாறு செய்தால் தான் உடனடியாக நிதி விடு விக்கப்படும் எனக் கூறியதாக பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் பள்ளிக்கல்வித்துறைக்கு ஒன்றிய அரசு வழங்க வேண்டிய நிதியை விடுவிக்க வேண்டும் என்று ஒன்றிய அரசிற்கு கடிதம் எழுதி இருந்ததற்கு, நிதியை ஒதுக்கீடு செய்யாமல், பிஎம்ஸ்ரீ திட்டத்தில் சேர்ந்து கொள்ளும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும் என்று பதில் அளித்துள்ள ஒன்றிய அரசிற்கு கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தேசியக் கல்விக் கொள்கையின் அடிப்படையில் தமிழ்நாட்டில் மும்மொழி கொள்கையை நடைமுறை படுத்துவது, 3,5,8,10,12 வகுப்புகளுக்கு பொதுத் தேர்வு நடத்துவது, குலக்கல்வித்திட்டத்தை அமுல்படுத்துவது, தமிழ்நாட்டுக் கலாச்சாரம் பண்பாட்டிற்கு எதிரானதுஎன்பதால்தேசியக்கல்விக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட பிஎம்ஸ்ரீ ஸ்கூலை தமிழ்நாட்டில் தொடங்கிட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடாமல் இருந்து வருகிறது.

தமிழ்நாட்டிற்கென தனியாக கல்விக் கொள்கையை உருவாக்கிட ஒரு குழுவை அமைத்து அக்குழுவின் அறிக்கையைப் பெற்று விரைவில் அமுல்படுத்த உள்ளது. இந்நிலையில் தேசியக் கல்விக் கொள்கையையோ, பிஎம்ஸ்ரீயையோ எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்.

புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்துவிட்டு பழைய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும், சரண்டர் தொகை விடுவிக்க வேண்டி ஆசிரியர் சங்கங்கள் தங்களது கோரிக்கைகளை தமிழ்நாடு அரசிடம் வைக்கும் போது, ஒன்றிய அரசிடம் இருந்து வர வேண்டிய நிதி வந்து சேரவில்லை. தமிழ்நாடு அரசின் நிதியில் இருந்து தான் செலவு செய்கிறது. நிதிப்பற்றாக்குறை காரணமாகவே ஆசிரியர்கள் அரசு ஊழியர்களுக்கு திமுக தேர்தல் அறிக்கையில் சொன்ன வாக்குறிதிகளை நிறைவேற்றிட மேலும் காலதாமதம் ஆகிறது என்கின்றனர்.

இனியும் ஒன்றிய அரசு நிதியை விடுவிக்காமல் காலம் தாழ்த்தினால், இன்னும் ஒரு சில மாதங்களில் தமிழ்நாட்டில் சிறப்பு ஆசிரியர்கள்,பகுதி நேர ஆசிரியர்கள், மாணவர்களுக்கான கல்வி உதவி தொகை, வட்டார கல்வி வள மைய ஆசிரியர் பயிற்றுநர்கள் உள்ளிட்டோருக்கு ஊதியம் வழங்க முடியாத நிலை உருவாகிவிடும். இதனால் சுமார் 20 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் பாதிக்கும் நிலை உருவாகும்.

அதே போல மாணவர்களின் அறிவுசார் கலைத்திறன்களை போட்டிகள் மூலமாக வெளிக்கொண்டு வரும்,கலைத் திரு விழாக்களை நடத்த முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.கல்வி உதவித் தொகை வழங்குவதும் பாதிக்கும்.

ஒன்றிய அரசின் வரி வருவாயில் அதிக நிதி வழங்கி முக்கிய பங்காற்றும் தமிழ்நாட்டிற்கு நிதி வழங்காத ஒன்றிய அரசின் செயல் கடுமையான கண்டனத்திற்குரியது..

அரசியல் காரணங்களுக்காக தேசியக் கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்டால் மட்டுமே நிதியை விடுவிக்க முடியும் என்று கூறி நிதியை விடுவிக்காமல் உள்ள ஒன்றிய அரசின் வாதம் ஏற்புடையத்தல்ல. ஏழை எளிய அரசுப்பள்ளி மாணவர்களுக்கு மட்டுமல்லாது,அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கும் பாதிப்பை ஏற்படும் என்பதைக் கருத்தில் கொண்டு உடனடியாக தமிழ்நாட்டிற்கு சர்வ சிக்ஷா அபியான் திட்டத்திற்காக வழங்க வேண்டிய நிதியை எவ்வித நிர்ப்பந்தமும் இன்றி ஒன்றிய அரசு உடனடியாக விடுவித்திட வேண்டும்.

ஒன்றிய அரசு எடுக்கும் நடவடிக்கையைப் பொறுத்து மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி அனைத்து ஆசிரியர்களையும் ஒன்று திரட்டி ஒன்றிய அரசை எதிர்த்து போராட்ட நடவடிக்கைகளை விரைவில் அறிவிப்போம்.

இவ்வாறு கு.தியாகராஜன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்

### திருச்சி மாநகரம் - (மேற்கு)

# பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாநகரச் செயலாளர் மு. அன்பழகன் அறிக்கை!

திருச்சி, செப்.2-

திருச்சி மாநகரம் மேற்கு செயலாளர் மு. அன்பழகன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திருச்சி மாநகரம் (மேற்கு ) தி.மு.க பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (2.9. 2024-திங்கள்கிழமை) காலை 10 மணியளவில், மாநகர தி.மு.க. அவைத்தலைவர் இரா.இராமலிங்கம் தலைமையில் மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள எல்.கே.எஸ். திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது. திருச்சி மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் வழக்கறிஞர் க.வைரமணி முன்னிலை வகிக்க உள்ளார்கள்.

இக்கூட்டத்தில் கழக முதன்மை செயலாளர், தமிழ்நாடு அரசு நகர்புற வளர்ச்சி துறை அமைச்சர் கே.என்.நேரு கலந்துகொண்டு கழக பணிகள் குறித்து ஆலோசனை வழங்கி சிறப்பிக்க உள்ளார்கள்.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற, சட்டமன்ற, இன்னாள் - முன்னாள் உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட கழக, மாநகர கழக நிர்வாகிகள், பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து அணியை சேர்ந்த நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள்,செயல் வீரர்கள் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்கு மாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.